# உங்களுடைய பிள்ளையைச் செவிமடுத்தல் மற்றும் அவருடன் கதைத்தல்

NEWCOMER PARENT RESOURCE SERIES




உங்களுடைய முழுக்குடும்பத்தையும் புதியதொரு நாட்டுக்கு வருதல் பாதிக்கின்றது. உங்களுடைய பிள்ளையுடன் தொடர்புகொள்ள, அவரைச் செவிமடுக்க, அவருடன் கதைக்க நீங்கள் நேரம்செலவழிப்பது, அவர் மேலும் பாதுகாப்பை உணர்வதற்கு உதவிசெய்யும் அத்துடன் அது மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாகவும் இருக்கிறது. உங்களுடைய பிள்ளையின் பார்வையில் உலகத்தைப் பார்க்க உங்களால் முடியுமாக இருந்தால் அவரை நீங்கள் சிறப்பாக விளங்கிக்கொள்வீர்கள். கஷ்டமான நேரங்களில் அவர்களுக்குச் சிறப்பாக உதவுவதற்கும் வேடிக்கையான தருணங்களில் ஒன்றாக நன்கு சிரிக்கவும் உங்களால் முடியுமாக இருக்கும். உங்களுடைய பிள்ளையைச் செவிமடுக்கவும், அவருடன் கதைக்கவும் நீங்கள் நேரம் செலவழிக்கும்போது தான் முக்கியமானவர் எனவும் அன்புசெய்யப்படுகின்றார் எனவும் அவர் உணர்வதற்கு அவருக்கு அது உதவிசெய்யும்.

## உங்களுடைய பிள்ளையைச் செவிமடுத்தல்

செவிமடுத்தல் என்பது உங்களுடைய காதுகளை விடவும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது. அவர் பசியாக, களைப்பாக, பயமாக, பதட்டத்துடன் இருக்கிறார் அல்லது அவருக்குக் கவனிப்பு தேவைப்படுகிறது என்பதை நீங்கள் நேரத்துடனேயே அறிந்துகொள்ளக்கூடியதாக உங்களுடைய பிள்ளையைக் கவனமாக அவதானித்தல் என அனேகமான வேளைகளில் அது பொருள்படுகிறது. உங்களுடைய பிள்ளையின் தேவைகளுக்கு நீங்கள் விரைவாகப் பதிலளிக்கும்போது அது நம்பிக்கையைக் கட்டியெழுப்புகிறது. அவர்களுடைய வாழ்க்கையிலுள்ள முக்கியமான வளர்ந்த நபர்கள் அவர்களுடைய உணர்ச்சிகளைப் பற்றி அக்கறைப்படும்போது பிள்ளைகள் நன்றாக உணர்கிறார்கள். அவர்களுடைய உணர்ச்சிகளை அடையாளம் காண்பதற்கும் அவற்றைப் பெயரிடுவதற்கும் அவர்களுக்கு உதவிசெய்வதும் நல்லதொரு வழியாகும். உதாரணத்துக்கு உங்களுடைய பிள்ளையை நீங்கள் தூக்கும்போது அவர் அழுகிறார் எனில், நீங்கள் சொல்லலாம்: "உங்களுக்கு அம்மா வேணுமா, எனக்கும் பிள்ளை வேணும்."

பிள்ளைகளை நீங்கள் செவிமடுக்கும்போது அவர்களும் உங்களைச் செவிமடுக்க விரும்புவார்கள். உங்களுடைய பிள்ளைக்கு என்னத்துடன் விளையாடுவதற்கு விருப்பமென்பதைக் கண்டறியுங்கள், பின்னர் வலுவான உறவொன்றைக் கட்டியமைக்க உதவுவதற்காக அந்த வேடிக்கையில் இணைந்துகொள்ளுங்கள்.

## உங்களுடைய பிள்ளை கதைப்பதற்கு உதவிசெய்தல்

### குழந்தைகள்

உங்களுடைய முகத்தை குழந்தைகள் அவதானிக்கின்றனர் அத்துடன் உங்களுடைய குரலின் தொனியைக் குழந்தைகள் செவிமடுக்கின்றனர். உங்களுடைய குழந்தையைப் பார்த்து நீங்கள் கதைக்கும் போது உங்களுடன் நெருக்கத்தை உங்களுடைய குழந்தை உணர்கிறார். உங்களுடைய குழந்தை சிரிப்பது அல்லது சத்தங்களை உருவாக்குவதுதான் அவர்கள் கதைப்பதற்குக் கற்பதன் ஆரம்பமாக இருக்கிறது. வளர்ந்த குழந்தைகள், நீங்கள் உருவாக்கும் அதே சத்தங்களை அனேகமாக உருவாக்குவார்கள். தொடர்பாடலை ஊக்குவிப்பதற்காக அவர்கள் உருவாக்கும் அந்தச் சத்தங்களை நீங்களும் எதிரொலிக்கலாம்.

# உங்களுடைய பிள்ளையைச் செவிமடுத்தல் மற்றும் அவருடன் கதைத்தல்

NEWCOMER PARENT RESOURCE SERIES

முதலில் தனக்கு ஏதோ ஒன்று தேவையென உங்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக உங்களுடைய குழந்தை அழுகிறார். அவருக்குத் தேவையானதை நீங்கள் கொடுக்கும்போது தான் கவனிக்கப்பட்டதாக அவர் உணர்கிறார். சில நேரங்களில் குழந்தைக்கு என்ன தேவையென்பதை அறிவது கடினமாகும், இருந்தாலும் அது என்னவென நீங்கள் கண்டறிய முயற்சிக்கும்போது உங்களுடைய அமைதிப்படுத்தும் குரலும் ஆறுதலளிக்கும் கைகளும் உங்களுடைய குழந்தைக்கு நம்பிக்கையளிக்கும் (உ+ம். "உங்களுக்கு வலிக்குதா?" அல்லது "அம்மா இருக்கிறன்")

ஒன்பது மாதத்துக்கும் பதினான்கு மாதத்துக்கும் இடைப்பட்ட குழந்தைகள் பொதுவாக ஒரு சொல் சொற்களைப் பயன்படுத்த ஆரம்பிப்பார்கள். ஆனால் அதன் கருத்து சொல்லைவிடப் பெரிதாக இருக்கும், (உ+ம். "அம்மா" என்பது "அம்மா எங்கே?" "என்னைத் தூக்குங்கள் அல்லது "இது அம்மாவுடையதா?" எனப் பொருள்படலாம்.)

**சிறு பிள்ளைகள்**

குழந்தைகளும் சிறுபிள்ளைகளும் (18 மாதத்துக்கும் 2 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள்) படிப்படியாக மேலும் மேலும் மொழியை விளங்கிக்கொள்வார்கள். இரண்டு சொற்களாலான வசங்களை அவர்கள் பயன்படுத்த ஆரம்பிப்பார்கள் (உ+ம்., "என்ரை கார்." "அது என்ன?") உங்களுடைய வீட்டு மொழியை நீங்கள் பேசும்போது உங்களை உங்களுடைய பிள்ளை சிறப்பாக விளங்கிக்கொள்வார்.

விளையாட்டின் மூலமாகச் சிறுபிள்ளைகள் கற்கிறார்கள். ஒன்றாக நீங்கள் விளையாடும்போது உங்களுடைய சிறுபிள்ளையுடன் உங்களுடைய வீட்டு மொழியில் பேசுதல் அவர்களுக்குப் பின்வருவனவற்றில் உதவிசெய்யும்.

- அவர்களுடைய விளையாட்டை அதிக நேரம் ஆர்வமாக விளையாடல்;
- வார்த்தைகளை விளங்கிக்கொள்ளல் அத்துடன் சொல்வதற்குக் கற்றுக்கொள்ளல்;
- அவர்களுடைய விளையாட்டில் அதிகம் ஈடுபாடு கொள்ளல்; அத்துடன்
- உங்களுடன் நெருக்கத்தை உணரல்

**PRESCHOOLERS (பாடசாலையை ஆரம்பிக்க முன்பான நிலையில் உள்ளோர்)**

பிள்ளைகள் அதிகம் கதைக்கும் போது அவர்களுடைய சொற்கள் தெளிவாகவும் ஆழமான கருத்துள்ளவையாகவும் மாறும். நண்பர்களை உருவாக்குவதற்காக மொழியைப் பயன்படுத்துவதற்கு அவர்கள் ஆரம்பிப்பார்கள். பிள்ளைகளுடன் எவ்வளவு அதிகமாக மற்றவர்கள் கதைக்கிறார்களோ அந்தளவுக்கு கதைப்பதற்கு பிள்ளைகள் முயற்சிப்பார்கள். அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை மட்டும் உங்களுடைய பிள்ளைக்கு நீங்கள் சொன்னால் உங்களை அவர்கள் செவிமடுப்பது அரிதாக இருக்கும்.

இளம் பிள்ளைகள் ஆர்வம் உள்ளவர்கள் என்பதால் உரையாடல் ஒன்றை ஆரம்பிப்பதற்கு இதை நீங்கள் பயன்படுத்தலாம். "ஏன்?" எனக் கேட்பதற்கு preschoolers கற்கும்போது அவர்களுக்கு ஆர்வமுள்ள விடயங்களைப் பற்றி நீங்கள் கதைக்கலாம் அத்துடன் ஒன்றாகக் கற்கலாம்

## உங்களுடைய பிள்ளையின் மொழியை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

1. ரிவி, ரேடியோ மற்றும் கைத்தொலைபேசியை அணையுங்கள். இரைச்சலைக் குறைப்பது பிள்ளைகள் செவிமடுப்பதற்கு உதவிசெய்யும். தொலைக்காட்சி நேரத்தை ஒரு நாளுக்கு ஒரு மணி நேரம் என எல்லைப்படுத்துங்கள். உங்களுடைய பிள்ளையுடன் நீங்கள் கதைக்க விரும்பும்போது அவரின் கவனத்தைச் சிதறடிக்கக்கூடியவற்றை அகற்றுங்கள்.
2. உங்களுடைய மொழியில் உங்களுடைய பிள்ளை பதிலளிப்பதை ஊக்கப்படுத்துவதற்காக உங்களுடைய வீட்டு மொழியைத் தொடர்ந்து பயன்படுத்துங்கள். (மேலதிக தகவல்களுக்கு, உங்களுடைய வீட்டு மொழியைப் பேணல் (Keeping Your Home Language) உதவிக் குறிப்புத் தாளைப் பார்வையிடுங்கள்.)
3. உங்களுடைய பிள்ளைக்கு உங்களுடைய உதவி தேவையானால் உடனே உதவிசெய்யுங்கள். அவருக்கு உதவி தேவைப்படும்போது நீங்கள் கவனிப்பதை இது காட்டும்.
4. உங்களுடைய முழுமையான கவனத்தையும் கொடுங்கள்.
5. உங்களுடைய பிள்ளை ஒரு குழந்தையாக இருக்கும் போதே அவருடன் கதைக்க ஆரம்பியுங்கள்.
6. இலகுவான சொற்களைப் பயன்படுத்துங்கள் அத்துடன் இலகுவான கேள்விகளைக் கேளுங்கள்.
7. உங்களுடைய பிள்ளை கற்பதற்காக வார்த்தைகள் மற்றும் குறுகிய சொற்றொடர்களைப் பயன்படுத்துங்கள் (உ+ம். "இன்னும்." "உதவி செய்யுங்கள்.").
8. நீங்கள் என்ன செய்கிறீர்கள் உங்களுடைய பிள்ளை என்ன செய்கிறார் என்பது பற்றிக் கதையுங்கள்.
9. நீங்கள் ஒன்றாக விளையாடும்போது உங்களுடைய பிள்ளையின் ஆர்வங்கள் பற்றிப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
10. உங்களுடைய பிள்ளை கதைப்பதை ஊக்குவிப்பதற்காக விளையாடுவதற்கான புதிய யோசனைகளைச் சேருங்கள். (உ+ம். பொருள்களை வாங்கல் மற்றும் விற்றலைப் பாவனை செய்வதன் மூலம் விளையாட்டுக் கடை.)
11. உங்களுடைய பிள்ளை சொல்வதையும் சேருங்கள்.
12. வெவ்வேறு சைகைகள், முக பாவங்கள், ஒலிகள், குரல்கள், கதைகள், விளையாட்டுகள் அல்லது பாடல்கள் மூலம் மொழியைச் சந்தோஷமானதாக்குங்கள்.

பன்மொழி பேசும் பெற்றோருக்கான மேலதிக தகவல்களுக்குப் பார்வையிடுங்கள் **cmascanada.ca/cnc/parents**

CMAS
SUPPORTING CHILD CARE IN THE SETTLEMENT COMMUNITY / SOUTIEN DE LA GARDE DES ENFANTS DANS LA COMMUNAUTÉ DE RÈGLEMENT
Funded by: Immigration, Refugees and Citizenship Canada / Financé par : Immigration, Réfugiés et Citoyenneté Canada